REGD. NO: M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ [illegible] 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 13உ செவ்வாய் (29—10—57) ★ ★ வெளியீடு: ஐப்பசி 14உ புதன் (30—10—57) [இதழ் 117

## உழவர்களின் உண்ணுநோன்பு

பாட்னு, அக். 28—

தங்கள் கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்தளிக்கப் படாமை குறித்து எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு, 17 உழவர்கள், பக்சார் நகரில், நீர்ப்பாசன அதிகாரி வீட்டு முன்பு உண்ணுநோன்பு இருந்து வருகின்றனராம்.

அவ்வட்டாரத்தில் 4 மாவட்டங்களில் 55 சதவிகித பயிர்கள் அழிந்து நஷ்டமாகி விட்டதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சொத்தி அஞ்சலின் 1-வது சர்க்கிளில் சுமார் 9,000 மக்கள் காட்டில் கிடைக்கும் கனிவகைகளைப் புசித்துக் காலங்கழித்து வருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

# 'இந்தியை எதிர்ப்போர் சிறுபான்மையினரல்ல'

## 'ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாட்டினை அவமதியாதீர்'

## 'உண்மைச் சுதந்தரம் இந்தி மொழி வெறிக்குப் பலியாகக்கூடாது'

## 'பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய முன்வருக'

### பண்டிதருக்கு தமிழக நல்லறிவாளர் வேண்டுகோள்

சென்னை, அக். 29—

இந்திக்கு எதிராகத் தமிழக நல்லறிஞர்கள் பண்டித நேருவுக்கு விடுத்துள்ள வேண்டுகோளின் முதல் பகுதி நேற்று வெளிவந்தது; பிற்பகுதி கீழே தரப்படுகிறது:—

### 6. ஜனநாயகக் கோட்பாடுகள்

நாட்டின் பெரும் பகுதிகள் பாதிக்கப்படுகையில், அதனால் ஏற்படும் தீங்குகள் சர்க்காருக்குத் தெளிவாக்கப்பட்ட பின்னும், 'பார்லிமெண்டரி ஓட்டு' முறை மிகக் குறுகிய முக்கியத்துவமே பெற முடியும். பெரும்பான்மை வாக்குப் பலத்தை அக்கிரமமாக உபயோகிப்பது ஜனநாயகமல்ல; ஜீவாதாரமான சிறுபான்மையினரின் நலன்களை மதித்துப் பாதுகாப்பது அடிப்படையானதோர் ஜனநாயகக் கோட்பாடாகும்; பார்லிமெண்டரி ஓட்டு முறைக்கு அதிக முக்கியத்துவம் தருவது அதனை மறுப்பதாகும். மேலும், இந்தப் பிரச்சினை எழுந்துள்ள நேரத்தில், 'இந்தியை எதிர்ப்பவர்கள் சிறுபான்மையினர்' என்ற ஒரு தவறான கருத்து நிலவுகிறது. இந்தியை எதிர்ப்பவர்களும், ஆதரிப்பவர்களும், பல்வேறு விகிதங்களில் நாடு முழுவதும் பரவியிருப்பது போலப் பேசப்படுகிறது.

சர்க்காரின் கொள்கையை தென்னிந்தியா முழுவதும் எதிர்க்கிறது. எண்ணிக்கையைக் கொண்டு கணக்கிடும் சிறுபான்மையைப் போன்றதல்ல இது. இது, நாட்டினுடைய ஒரு பகுதியே காட்டும் எதிர்ப்பாகும்.

### 7. அரசியல்சட்டஆதாரங்கள்தான் மிகக்குறைந்த மதிப்புடையவை

அரசியல் சட்ட சம்மதம் என்ற வாதம்—இந்திக் கொள்கையால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு - அதுவும் சர்க்காருக்குப் பிடிக்காத விதிகள் ஒவ்வொரு மக்கள் சபைக் கூட்டத்திலும மாற்றப்படுகிறபொழுது மிகவும் பலவீனமானதாகப் படுகிறது. அரசியல் சட்டம் வகுக்கப்பட்ட நேரத்தில் வெள்ளையருக்கு எதிரான உணர்ச்சி தணிந்திருக்கவில்லை. மேலும், இந்தியை ஆட்சி மொழியாக்குவது என்ற திட்டத்திற்கு காங்கிரஸ் கட்சியிலேயே இருமுறைகள் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை என்றும், மூன்றுவது சந்தர்ப்பத்தில்கூட ஒரு வாக்குப் பெரும்பான்மையிலேயே அத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும் இப்போது அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது. 'மூன்றில் இருபங்கு பெரும்பான்மைவேண்டும்' என்ற அரசியல் சட்ட கோட்பாட்டினை வைத்துப் பார்த்தால், கட்சி வாக்கு ஆதாரவாக இருப்பதாகச் சொல்ல முடியாது; மேலும், நாட்டிலேயே, இருகருத்தினருக்கும் உள்ள சமபலத்தைப் பிரதிபலிப்பதாகவே வாக்கு இருக்கிறது.

### 8. இந்திக்குக் கெடுநாள்

இந்தியைப் பிறிதோர் நாள் புகுத்திக் கொள்ளலாம் என்று வற்புறுத்துகிறவர்கள் கூட, அதே காரணங்களுக்காக அதை ஆதரிக்கவும் இல்லை. அந்தத் தீய நாளை ஒத்திவைக்க வேண்டுமென சிலர் விரும்புகின்றனர்; சிலர், 'ஒத்திவைத்துவிட்டால், பின்னர் அது கைவிடப்பட்டுவிடும்' என்று நம்புகின்றனர்; அதேநேரத்தில் வேறு சிலர், 'கொஞ்சகாலம் சென்றால் இந்தி வளர்ந்து, தகுதி காரணமாக அதற்குரிய இடத்தைக் கோரலாம்' என்று கருதுகின்றனர்; இன்னும் சிலர், 'இந்தி பேசாத மக்கள் இந்தியில் மேலும் திறம்பெறட்டும்' என்று கருதுகிறார்கள். இவ்வித குழம்பிய முரண்பட்ட சிந்தனைகளில் உழன்று கொண்டிருப்பதினால், இப்போதுள்ள நிலை நீடிக்காமல் மாற்றப் படுவதற்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றனவா என்ற பிரதான பிரச்சினையை மறந்துவிடுகின்றனர்.

நீதி, நேர்மை இவற்றின் அடிப்படையில் தென்னாட்டு மக்கள் இந்தியை எதிர்க்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிற காரணத்தினால், ஆங்கிலத்தை ஆட்சிமொழி நிலையிலிருந்து அகற்றுவதினால் அனுகூலங்கள் எதுவும் இல்லை என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிற காரணத்தினால், தென்னக மக்கள் சார்பில் நாங்கள் சொல்லுகிறோம்; மேலும், பிரிவினைச் சக்திகளை ஒழித்தல், தேசிய ஒற்றுமை இவற்றின் நலன் கருதியும், இப்போதைய இந்திக் கொள்கை கைவிடப்பட வேண்டியது, மிக அவசியமானதாகும். ஏற்கனவே, 'தென்னாடு மத்திய சர்க்காரால் புறக்கணிக்கப்படுகிறது— அலட்சியப் படுத்தப்படுகிறது' என்ற உணர்ச்சியும் நிலவுகிறது, இது முழுவதும் உண்மையாகவும் இருக்கலாம்—இல்லாமலும் இருக்கலாம்; ஆனால், இந்தி பேசும் மக்கள் இந்தியாவின் இதர பகுதியின்மீது ஆதிக்கம் செலுத்த வசதி செய்வதின் மூலம் இந்த அச்சத்தை ஊட்டி வளர்ப்பது, அரசியல் அறிவீனமாகும். தங்களுக்குத் துவக்கத்தில் ஏற்படும் ஏமாற்றத்தை இந்தி உற்சாகிகள் சமாளித்துக் கொள்வார்களானால், அவர்களது உறைந்து கிடக்கும் தேசப்பற்று தலைநிமிர்ந்து, பரஸ்பர நலன்களின் அடிப்படையில், ஒற்றுமை வேண்டும் என்ற அவசியத்தை அவர்களுக்கு உணர்த்தும் என்று நம்பலாம்.

### 9. அடுத்த நடவடிக்கை பிரதமரிடமிருந்தே வரவேண்டும்

இந்த ஆட்சிமொழிப் பிரச்சினையில் பல்வேறு பிரிவினரும், பல மாநிலங்களும் எதிரிடையான நோக்கம் கொண்டிருக்கின்றனர்; மேலும், இது, உணர்வுபூர்வமான ஒற்றுமையைக் குலைக்கும் ஒரு கவலைக்குரிய நிலைமையும் வளர்த்துவிட்டிருக்கிறது. எனவே, இதில் பாரபட்சமின்றித் தலையிட்டு, வேற்றுமைகளை அகற்றி, வேறு எல்லாவற்றிற்கும் மேலாக தேசிய நலனை முன்னிறுத்த பிரதமரைத் தவிர வேறு எவராலும் முடியாது. எனவே, அவர், பிரச்சினையை முழுவதுமாக மீண்டும் பரிசீலிக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்; ஏனெனில் அப்போதுதான், உண்மையான சுதந்தரம் நிலைநிறுத்தப்படமுடியும்; இன்றேல், அது சிலர் தங்களின் சொந்தமொழி மீது கொண்டுள்ள மிதமிஞ்சிய வெறியான ஆசை என்ற பலிபீடத்தில்—நாங்கள் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்—சாய்க்கப்பட்டுவிடும்.

# மைசூர் கவர்னர் இராஜினாமா?

## தசரா ஊர்வலம் பற்றித் தகராறு?

### 'இல்லை' என்கிறார் முதன் மந்திரி

பெங்களூர், அக். 27—

மைசூர் கவர்னர் இராஜினாமாச் செய்யப் போவதாகச் சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை மாநில முதன்மந்திரி நிஜலிங்கப்பா மறுத்துரைத்திருக்கிறார்.

மந்திரிசபைக்கும் — கவர்னருக்கும் தகராறு என்றும், எனவே தான் பதவியிலிருந்து விலகிவிடப் போவதாக கவர்னர் முடிவு செய்து அறிவித்துவிட்டார் என்றும் சில பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

இவற்றை முழுவதும் கட்டுக்கதைகள் என்று மறுத்த முதன் மந்திரி, மந்திரி சபைக்கும்—கவர்னருக்கும் தசரா கொண்டாட்டங்களின் போது சிறிது கருத்து வேறுபாடு இருந்ததாகவும், அது அப்போதே சரிசெய்யப்பட்டுவிட்டதாகவும் கூறியுள்ளார்.

'இதுபோன்ற தகராறுகளில் கவர்னரின் பெயரை இழுப்பது வெறுக்கத்தக்கது' என்றார் அவர்!

'கவர்னருடன் இருந்த வேறுபாடுகள், எந்தத் தனி நபர்களையும் பொறுத்தவை அல்ல; சில சூழ்நிலைகளைப் பொறுத்தே இருந்தன; என்று கூறிய அவர், அது பற்றி மேலும் கூற மறுத்துவிட்டார்.

தசராவின்போது, முதலில் ஊர்வலம் ரத்து செய்யப்பட்டது; பின்னர், முதன் மந்திரியும், மைசூர் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் சென்னையாவும், கவர்னரைச் சந்தித்துப் பேசி ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தனர்.

# இந்திக்கு ஆதிக்கம் கோரி நடைபெறும் ஆர்ப்பாட்டம்

## சீக்கிய மதத்தின்மீது ஏவப்பட்டுள்ள கொடுந் தாக்குதல்'

### மக்கள் சபைத் துணைத்தலைவர் ஹுகும் சிங் கருத்து

ஜலந்தர், அக். 28—

"பஞ்சாபில் இந்திக்கு ஆதிக்கம் கோரி நடைபெறும் கிளர்ச்சி, சீக்கிய மதத்தின்மீது ஏவப்பட்டுள்ள கொடுந்தாக்குதல்" என்று, மக்கள்சபைத் துணைத் தலைவர் சர்தார் ஹுகும்சிங் இங்கு எச்சரித்திருக்கிறார்.

பஞ்சாபில் வாழும் இந்துக்களையும், சீக்கியர்களையும் இரண்டு தனி மொழிக் கூட்டத்தவராகப் பிரிக்கப் பெரும் முயற்சி நடைபெறுவதாகவும், இதற்கு முன் எவரும், மொழியையும் மதத்தையும் இணைத்துப் பேசியதில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நாற்பதாவது சீக்கிய கல்வி மாநாட்டில் பேசிய அவர், மேலும் குறிப்பிட்டதாவது:—

"பஞ்சாபில் உள்ள பெரும்பான்மையினர், தாங்கள்தான் ஆளுபவர்கள் என்றும், இதரர்கள் ஆளப்படுகிறவர்கள் என்றும் கருதுகிறார்கள்; அதுவே நமது துரதிருஷ்டம்; அதனால் தான் அவர்கள் அவ்வளவு நியாய விரோதமாக நடந்து கொள்ளுகிறார்கள்"

"பஞ்சாபியை ஒரு வரி வடிவம் என்று கூறுவதைவிட பெரும் அநீதி வேறு எதுவும் இழைக்க முடியாது. பஞ்சாபி ஒரு சுதந்தரமான மொழி; தொன்மையான வேதங்களைப்போல, பஞ்சாபிக்கும் பழமையான இலக்கியப் பாரம்பரியம் உண்டு. பஞ்சாபி மொழிக்கு அரசியல் சட்டத்தில் உரிய அங்கீகாரம் தந்தானபின், அதுபற்றித் தகராறு கிளப்புவதில் நியாயமே இல்லை"

# இளமைத் துடிப்புள்ள புது இரத்தம்

## காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் தேடி அலைகின்றனராம்!

புதுடில்லி, அக். 28—

காங்கிரசிற்கு, இளமைத் துடிப்பு மிக்க புதிய இரத்தம் பாய்ச்சுவதில், மேலிடத் தலைவர்கள் மிகுந்த அக்கறைகாட்டிவருகின்றனராம்!

இப்போது காங்கிரசிலிருப்பவர்கள் எல்லாம், நடுத்தா வயதினரும், வயது சென்றுவிட்ட முதியவர்களும்தான் என்பதால், புதிய இரத்தம் தேவைப்படுகிறதாம்!

இதன் காரணமாகத் தான், இலட்சுமணபுரியில் நடைபெறும் இளைஞர் காங்கிரஸ் மாநாட்டில், மேலிடத் தலைவர்கள் பலரும், நேரு, தேபர், பண்டித பந்த், மொரார்ஜி தேசாய், சகஜீவன் ராம், லால்பகதூர் சாஸ்திரி, டாக்டர் இராதாகிருஷ்ணன், மற்றும் பலரும் கலந்துகொள்கின்றனராம்!

ஆனால், சென்ற ஆண்டு இதே போல ஐதராபாத்தில் நடைபெற்ற மாநாட்டிற்கு, தேபர் மட்டுமே சென்றிருந்தாராம்!

4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—10—57 செவ்வாய்

# புதிய அபாயம்

★

உணவு உற்பத்தியில் இந்தியத் துணைக்கண்டம் தன்னிறைவு அடைந்துவிட்டது—ஏன்—இனி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய கட்டத்தைக்கூட அடைந்துவிட்டது என்றெல்லாம் பலபட பேசிவந்தனர், டெல்லி காங்கிரசு ஆளவந்தார்கள். அவ்வெற்றிக்கான தங்கள் ஆற்றலையும், அறிவுடைமையையும் தங்களுக்குத் தாங்களே பாராட்டிக் கொள்ளவும் செய்தனர்.

உணவுப் பண்டங்களின் உற்பத்தி சென்ற சில ஆண்டுகளாகப் பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது என்பதை மெய்ப்பிப்பதற்காகப் புள்ளிவிவரங்களும் காட்டப்பட்டன. அதை மறுக்கும் வகையில் அதே ஆளவந்தார்களால் வேறு புள்ளி விவரங்களும் காட்டப்பட்டன.

காங்கிரசு ஆளவந்தார்களின் இச்செயலைக்கண்ணுற்ற பொதுமக்களோ, அவர்களில் எவர் கூறுவதை உண்மையாகக்கொள்வது; எவர் சொல்லுவதைப் பொய்யெனத் தள்ளுவது எனத் தீர்மானித்துக்கொள்ள முடியாமல் திகைக்கலாயினர். ஆனால், பொதுமக்களுக்கு இவ்வகையில் எவ்வளவுதான் திகைப்பிருந்தபோதிலும், உணவுப் பண்டங்களின் உற்பத்தி, தேவைக்கும் கூடுதலாகப் பெருகிவிடவில்லை என்ற பேருண்மையைமட்டும் தங்கள் சொந்த அனுபவத்தின் வாயிலாக நன்கு தெரிந்துகொள்ளலாயினர்.

உணவுப்பண்டங்கள் அளவுக்கதிகமாக உற்பத்தியாகி இருந்தால், அப்பண்டங்கள் தேவைக்கதிகமாகக் கிடைக்கப்பெறுவதுடன், விலை மலிவாகவும் அல்லவா கிடைக்கவேண்டும்—அப்படிக் கிடைக்காததிலிருந்தும், கிடைக்கும் கொஞ்சமும் கூடுதலான விலைக்குக் கிடைப்பதைக் கொண்டும், உணவுப் பண்டங்களின் உற்பத்தி தேவையான அளவு கூடவில்லை என்ற உண்மையைப் பொதுமக்கள் ஐயத்திற்கிடமின்றி அறிந்து கொண்டுள்ளனர். உற்பத்தி கூடிவிட்டது எனக் குதூகலத்துடன் கூறிவந்த காங்கிரசு ஆளவந்தார்களின் சொல்லிலும் நாணயமில்லை என்பதைப் பொதுமக்கள் தெளிவுபடத் தெரிந்து கொண்டுள்ளனர்.

உணவு உற்பத்தி பெருகிவிட்டது என்ற டெல்லிக் காங்கிரசு ஆளவந்தார்களின் வீண் பேச்சு ஒருபக்கம் இருக்க, இப்பொழுது தாங்களாகவே முன்வந்து உணவுப்பண்ட இறக்குமதியைப் பெருக்க வேண்டும் என்று அவர்கள் கூறமுன்வந்து இருக்கின்றனர். நிற்க.

பீகார், ஒரிசா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட பருவக் கோளாறின் காரணமாக உணவு உற்பத்தியில் ஏற்பட்டுள்ள குறைவை இறக்குமதி மூலம் ஈடுசெய்ய வேண்டும் என்று உணவு அமைச்சர் கூறமுன்வந்து இருக்கிறார். உணவுப் பண்டங்களை அதிகமாக இறக்குமதி செய்ய வேண்டியதின் காரணமாக வெளிநாட்டுத் தானியங்களின் தேவையும் முன்னிலும் அதிகமாகிறது இந்தியப் பேரரசிற்கு. இப்பொழுதே அன்னிய செலாவணி தமக்குத் தேவைப்படும் அளவு கிடைக்கப்பெறாத காரணத்தினால், இரண்டாவது திட்டத்தில் எந்தெந்த ஏற்பாட்டை எந்தெந்த அளவில்வெட்டுவது, துண்டிப்பது என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றது இந்தியப் பேரரசு. இந்த நெருக்கடியுடன் உணவு இறக்குமதியும் கூடுதலாக்கப்படுமானால், அன்னிய செலாவணிக்கு ஏற்படக்கூடிய பஞ்சம் முன்னிலும் அதிகரிக்கக்கூடும். அதன் விளைவாக, இரண்டாவது திட்ட ஏற்பாடுகளும் முன்னிலும் கூடுதலாக வெட்டப்பட்டு விடும்.

இப்படி திட்ட ஏற்பாடுகள் வெட்டப்படுகின்ற பொழுது, வடநாட்டில் இடம் பெற்றுள்ள திட்டங்களில் பெரும்பாலானவை வெட்டுக்கு உட்படாமல் தப்பித்துக்கொள்ளும். இரண்டாவது திட்டத்தில் இடம் பெற்றுள்ள தென்னக ஏற்பாடுகள்தான், புதிய வெட்டுக்கு பலியாகிவிடும்.

வடநாட்டில் செயல்படுத்தப் பட்டுவரும் ஏற்பாடுகள் அனைத்தும், முதலாண்டுத் திட்டக் காலத்திலேயே துவங்கப்பட்டு இரண்டாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருவதாகும். ஆனால் தென்னகத்திலோ முதலாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளோ மிகமிகச் சாதாரணமானவை—குறுகிய கால அளவில் செய்து முடிக்கக்கூடியவை. எனவே, முதல் திட்டத்தில் இடம் பெற்றிருந்த தென்னக சிறு சிறு ஏற்பாடுகள் முதல் திட்டக் காலத்திற்குள்ளாகவே முடிந்துவிட்டவைகள். ஆனால் இரண்டாவது திட்டத்தில் இடம் பெற்றுள்ள தென்னக ஏற்பாடுகளான குந்தா நீர் மின்சார உற்பத்தித் திட்டமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டமும், சில மாதங்களுக்கு முன்புதான் துவங்கப்பட்டிருப்பவைகள்; இப்பொழுதும் துவக்க நிலையிலேயே இருப்பவைகள். எனவே, அன்னிய செலாவணிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை ஒரு புகலாகக் கூறி மேற்படி இரண்டு ஏற்பாடுகளையும் காலம் குறிப்பிடாது தள்ளிப்போட்டாலும் இந்தியப்பேரரசு போட்டுவிடக்கூடும். ஏற்கனவே இருந்துவரும் இந்த அபாயத்தை, அதிகமாக உணவு இறக்குமதிக்காகத் தேவைப்படும அன்னிய செலாவணி மேலும் கூடுதலாக்குகிறது. டெல்லி காங்கிரசு ஆளவந்தார்களின் குணநலம் தெரிந்திருக்கும் எவருக்கும், மேற்படி வகையில் அச்சம் ஏற்படுவது எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

# இந்தித் திணிப்பு இந்திபேசாதமக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கும்

## 'உலகில் இந்தியாவைப் பின்னுக்குத் துரத்தும்'

### 'கொடுமையின் சின்ன'மாக இந்தி கருதப்படும்

### இந்தி ஏகாதிபத்தியத்திற்கு ஆங்கிலோ-இந்தியர் தலைவர் சூடு

ஐதராபாத், அக். 27—

"ஆட்சி மொழி என்ற சொல் உணரப்படுகிற பொருளில், இட்போதிருக்கிற ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி என்றைக்குமே இடம் பெற முடியாது" என்று, அகில இந்திய ஆங்கிலோ-இந்தியர் சங்கத் தலைவரான பிராங்க் அந்தோணி எம்.பி. கருத்தறிவித்திருக்கிறார்.

சங்கத்தின் ஆண்டு விழாக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், 'இந்தி ஏகாதிபத்தியவாதிகளின் இந்தித் திணிப்பு முயற்சி'களை வன்மையாகக் கண்டித்தார்.

"இந்தி, ஆட்சி மொழியாக்கப் படுவதற்குக் கிஞ்சிற்றும் தகுதியற்றது" என்று திட்டவட்டமாகக் கூறினர். அதனை ஆட்சி மொழியாக்குவது, நாடு பிளவுபடுவதில் கொண்டுபோய் நிறுத்தும் என்பதுடன், இந்தியாவை, உலகின் மிகப் பின்தங்கிய நாடுகளின் நிலைக்கு—குறிப்பாக, விஞ்ஞானம், மற்றும் தொழில் துறைகளில் கொண்டு போய்விடும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

"ஆங்கிலத்தை அன்னிய மொழி என்று கூறி, 'ஆகவே அது கூடாது' என்கிறார்கள். இப்படிக் கூறுபவர்கள், இழிவழக்காடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு மட்டுமின்றி சட்டத்தையும் உண்மைகளையும் பார்க்க குருட்டுத்தனமாக மறுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டிற்கும் ஆளாவார்கள். இந்த விவகாரம் முழுவதையும் அரசியல் நோக்கம் கற்பித்து தட்டிக்கழித்துவிடுவது கண்டு நான் மிக வருந்துகிறேன்.

"இப்படிச் செய்வதினால் கல்வித் துறையில் மட்டுமின்றி, அரசியல், மற்றும் நிர்வாகத் துறைகளிலும் முதல்தரமான துன்ப முடிவுக்குத்தான் அவர்கள் இழுத்துச்செல்லப்படுவார்கள்'

"ஆங்கிலம் இனியும்ஒரு அன்னிய மொழி அல்ல; அங்கீகரிக்கப்பட்ட ஒரு இந்திய சிறுபான்மை மக்கள் கூட்டத்தின். மொழியாகும்.

"இந்தி திணிக்கப்படுவது, இந்தி வழங்காத பகுதியினரை—அதிலும் குறிப்பாக, இந்திக்கு அதிகமான எதிர்ப்புக் காட்டுகிற சென்னை மாநிலத்தவரை இரண்டாந்தரமான குடிமக்கள் நிலைக்குத் தாழ்த்தும், என்பதால், இந்தி 'கொடுமையின் சின்னமாக'வே கருதப்படும்.

"இந்த விஷயங்களை வெளிப்படையாகவே, காலந்தாழ்த்தாமல் தெரிவித்தாகவேண்டியிருக்கிறது; ஏனெனில், ஆட்சி மொழிக் குழு அறிக்கையைப் பரிசீலிக்க நியமிக்கப்பட்டுள்ள மக்கள் சபைக் குழுவின் முடிவுகள் ஏற்கெனவே தெரிந்தவைதான்; எவ்வாறெனில் அதில் இடம் பெற்றிருக்கும் பெரும்பாலானோர், பிரபலமான இந்தி வெறியர்கள்; மற்றும், இந்தி வழங்கும் மாநிலங்களைச் சார்ந்தவர்களே"

என்றும் பிராங்க் அந்தோணி கண்டனம் முழக்கியுள்ளார்.

## அண்ணா பேச்சு

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"என் வேலையை அறிந்து பயன்படுத்துகின்ற அமைப்பு அப்பொழுது இல்லை; இப்பொழுது இருக்கிறது. பெரியார் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. என்பதைத்தான் தெரிவித்துக் கொள்ளவேண்டியுள்ளது.

"'இவர்கள் சிறுவர்கள்; கொஞ்ச காலத்திற்குள்ளேயே அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டு கலைந்துவிடுவார்கள். அப்போது பார்த்துக் கொள்கிறேன்' என்றார் பெரியார்.

"ஆனால் நாங்கள் இருக்கிறோம். நானே பார்த்து வியக்கத்தக்க நிலையில் வளர்கிறது, தி. மு. கழகம்.

"இது சாதாரண அரசியல் கட்சியல்ல; அரசியலில் நாட்டமும், அக்கறையும் இல்லை என்பதாலல்ல; மற்றவர்களைப்போல் இடம்பிடிப்பதல்ல எங்கள் நோக்கம். 'சுறைக்காய்' விடும் கட்சியல்ல இது!

"பிறப்புரிமையும், இனஉரிமையும், மொழி உரிமையும் சீர்குலைந்துவரும் உண்மையை மக்களிடம் பன்னிப்பன்னி, பையப்பையச் சொல்லிவரும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தேசீய ஸ்தாபனம்!

"என்னை யார் எவ்வளவு ஏசினாலும் எனக்குக் கோபம் வருவதில்லை; இதனால், 'அண்ணாதுரைக்குச் சொரணை இல்லை' என்று கூடச் சொல்லிப் பார்த்தார்கள்; எதைச் சொன்னாலும் நான் கோபப்படுவதில்லை.

"'எவ்வளவு திட்டினாலும் இவன்களுக்குக் கோபம் வரவில்லையே; என்னை, 'தந்தை' என்று தானே அழைக்கிறான்கள்; அவன்கள் வம்புக்கு நாம் போகவேண்டியதில்லை'—என்று பெரியார் கூடச் சொன்னதாகப் பத்திரிகையிலே பார்த்தேன்.

"அதிக அளவு தி. மு. கழகத்தினர் சகிப்புத்தன்மையைக் கற்றால்தான், பொறுப்புணர்ச்சி வளரமுடியும். முதல் முதல் பெரியார் திட்டியதற்கெல்லாம் நாம் சகித்துக் கொண்டிருந்திராவிட்டால் அவர் இப்பொழுது இப்படிப் பேசுவாரா?"

# ஓட்டல் பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயர்

## அகற்றிவிடுமாறு முதலாளிகளுக்கு கேரள சர்க்கார் அறிவுரை

மக்களின் விருப்பத்திற்கும் கருத்திற்கும் ஒப்ப, கேரள மாநிலத்தில் உள்ள உணவு விடுதிகள், மற்றும் நிறுவனங்களில் உள்ள பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயர் இருப்பதை, அவற்றின் உரிமையாளர்கள் நீக்கிவிடுவர் என்று கேரள சர்க்கார் நம்புவதாக, அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனர்.

"சட்டசபையில் உள்ள மக்களின் பிரதிநிதிகளும், இதர ஆலோசனை சபைகளில் உள்ளவர்களும், ஓட்டல் பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயர்கள் இருப்பதை எடுத்துவிடவேண்டுமெனத் திட்டமான கருத்தறிவித்துள்ளனர். மேலும், சாதிப் பெயர்கொண்ட ஓட்டல்களின் 'லைசென்சு'கள் புதுப்பிக்கப்படக் கூடாது என்றும் கருத்தறிவிக்கப் பட்டது; ஆனால், அதுபோன்ற ஒரு கடுமையான நடவடிக்கை இப்போது தேவை இல்லை என்று சர்க்கார் கருதுகிறது. அதேநேரத்தில் ஓட்டல் முதலாளிகளும், இதரரும் நல்லெண்ணத்தோடு, சாதிப் பெயர்களை நீக்கிவிடுவர் என நம்புகிறோம்" என்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

# அறநிலையத்தில் முடங்கிக் கிடக்கும் அதிகப் பணம்

## தீண்டாதாம் சென்னை!

### ஏ. கோவிந்தசாமி கேள்விக்கு அமைச்சர் தரும் பதில்

சென்னை, அக். 26—

"சென்னை அறநிலையங்களில் அதிகப்படியாக முடங்கிக் கிடக்கும் பணத்தை சென்னை மாநில அரசு, மக்களின் சமூக முன்னேற்றத்திற்கோ, கல்வி முன்னேற்றத்திற்கோ பயன்படுத்தும் நோக்கம் இல்லை"

என்று மாநில உள்நாட்டு அமைச்சர் திரு. பக்தவத்சலம் சட்டசபையில் கேள்விநேரத்தில் தெரிவித்தார்.

திருப்பதியில், உழைக்காமல் ஏழுமலையானுக்குக் குவிந்து கிடக்கும் வருமானத்தைப் போன்று நமது மாநிலக் கோயில்களுக்கு வருமானம் இல்லை என்றும், அதைப் போன்று பல்கலைக் கழகம் நிறுவ வழி இல்லை என்றும் நமது கழக உறுப்பினர் திரு. ஏ. கோவிந்தசாமி கேட்டதற்கு பதிலளிக்கும்போது அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# சட்டமன்றத்தில் நெய்வேலித் திட்டம்

## எம்.பி. சுப்பிரமணியம் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, அக். 26—

"தென்னாற்காடு மாவட்டத்தில் கிடைக்கும் தென்னகத்துச் செல்வமான நெய்வேலி நிலக்கரி, இரும்பு உருக்கும் அடுப்புகளில் எரி பொருளாகப் பயன்படுத்தத் தக்கது என்று அமெரிக்க சுரங்க நிலையம் அறிவித்துள்ளது" என்று, சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அறிவித்தார்.

தொடர்ந்து விரிவாகஆராய்ச்சி நடத்தவேண்டியுள்ளது என்றும் அமெரிக்கா,தன் குறிப்பில் தெரிவித்துள்ளதாம்.

இதனால் ஏற்படும் தாமதம், நெய்வேலித் திட்டத்தைப் பாதிக்காது என்றும், தெரிந்துகொள்ள வேண்டிய நல்லவற்றை அறிந்த பின்னர், திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவிபுரியும் என்றும் கழக உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# 'திரண்டுள்ள சக்தியை பயனுள்ள பணிக்கு நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'

## 'தி. மு. கழகம் தன் செல்வாக்கை 'சூறைக்காய்' ஆக்கிவிடாது'

## 'நாட்டு விடுதலைப் போராட்டத்துக்கு நல்ல 'அடித்தளம்' வேண்டும்'

### கொருக்குப்பேட்டையில் அண்ணு தெளிவுரை

கடந்த 25-10-57-ல், சென்னை-கொருக்குப்பேட்டையில் நடைபெற்ற 5-வது வட்ட தி. மு. கழக—இளங்கோ படிப்பகத் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் பேசிய அண்ணு அவர்கள், நம் கழகத்துக்குத் திரண்டிருக்கும் சக்தியைப் பற்றியும், அதை எந்தவிதத்திலே நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமேன்பதையும் விளக்கி, மக்களிடம் இன-மொழி உணர்ச்சியையூட்டி நாட்டுப் பற்று ஏற்படச் செய்தால் திராவிடநாடு விடுதலை பெறுவது மிக எளிதான காரியம் என்பதை எடுத்துச்சொன்ஞர்கள்; அவருடைய பேச்சு வருமாறு :—

''தேங்காயை தேவாலயத்துக்கு எடுத்துச்சென்று உடைத்து அர்ச்சனை செய்யச் சொல்லி, ஒரு மூடியை அர்ச்சகருக்குக்கொடுத்துவிட்டு, இன்னொரு மூடியை வீட்டுக்குக் கொண்டுசெல்பவர்களும் உண்டு.

''இன்னும் சிலர், வீட்டு விசேடத்தின்போது 'திருஷ்டி' கழிப்பதாகக் கூறி, நடுவீதியில்—சூறைக்காய் உடைப்பதுபோல—உடைப்பார்கள்; அதைப் பொறுக்கச் செல்பவர்களில், சாமர்த்தியம் உள்ளவனுக்கு நல்ல தேங்காய் கிடைக்கும்; மற்றவர்களுக்கு வெறும் ஒடுதான் கிடைக்கும்.

''இன்னொரு விதமும் உண்டு; தேங்காயைத் தாய்மார்களிடம் கொடுத்தால், அதை உடைத்துப் பதமாகத் திருகி, எந்தப் பண்டத்திலே சேர்த்தால் இனிப்போடு சுவை தரும் என்பதறிந்து, பக்குவமாகச் சேர்த்துப் படைப்பார்கள்.

''கட்சிகளும் அப்படித்தான்; பயன்படுத்துகிற விதத்தையொட்டித்தான் பலனும் இருக்கும்.

''மூன்ருவது சொன்னேனே, அந்த விதத்தைச் சேர்ந்ததுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

''சில கட்சிகள், தங்களுக்கிருக்கும் செல்வாக்கை 'சூறைக்காய்' உடைக்கிறதைப்போலப் பயன்படுத்திவருகின்றன; உடைக்கும்போது சிலருக்கு மண்டைகளும் உடைகின்றன; சாமர்த்திய முள்ளவனுக்குத் தேங்காய் கிடைக்கிறது; நோஞ்சலாயுள்ளவன் ஒட்டை எடுத்துக்கொண்டு போகிருன்.

''திராவிட முன்னேற்றக் கழகம், தன் செல்வாக்கை அவ்வப்பொழுது பலப் பரீட்சை நடத்தாமல், பலாத்காரத்தில் இறங்காமல், ஒருவரோடு இன்ஞெருவர் மோதிக்கொள்ள உதவாமல் பயன்படுத்தவேண்டும். வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்க வலிவைத் திரட்டுவதுதான் நம் வேலையாக இருக்கவேண்டும். அதை விடுத்து, இருக்கின்ற வலிவைச் சிதறடித்து, சின்னுபின்னமாக்கி ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டால், அந்த சாக்கைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணியிருக்கிருர்கள் சிலர்.

''எங்கள் ஊரில் உடற்பயிற்சி விளையாட்டில் ஈடுபட்டுள்ள வாலிபர்கள் சிலர் உடற்பயிற்சிக் சழகம் ஒன்று அமைத்து அதன் விழாவைக் கொண்டாடினுர்கள்; அதற்கு என்னையும் அழைத்திருந்தார்கள்; நானும போயிருந்தேன். அப்பொழுது என்னைப் பேசச் சொன்னபோது, அவர்களுக்குச் சில அறிவுரைகளைச் சொன்னேன்.

''உடற்பயிற்சியில் ஈடுபட்ட வாலிபர்களுக்கு 'முண்டா' வலுத்துவிட்டால் யாரை சண்டைக்கு வலிக்கலாம் என சந்து முனைக்குச் சந்துமுனை அலைந்து பார்ப்பார்கள். சண்டை கிடைக்காமல் போய், வேறு யாராவது சண்டை போட்டுக்கொண்டிருப்பதைக் கண்டால், இடையில் புகுந்து 'பஞ்சாயத்து' பேசுவதுபோல் பேசி, சண்டைபோட்டவரிடம் வலிச்சண்டை போடுவார்கள். உடற்பயிற்சி கொட்டடி முதல் போலீஸ் கொட்டடிவரை அவர்கள் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். இது ஏற்படாத வகையில் நடந்துகொள்ளவேண்டும்; உடற்பயிற்சியோடுகூட உள்ளப் பயிற்சியும் வேண்டும் என்று நான் அவர்களுக்குச் சொன்னேன்.

''வலிமையை எந்தப் பெரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமோ அதற்குப் பயன்படுத்த வேண்டும். தி. மு. கழகம் தன் வலிமையைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். சமயம் வரும்போது இதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறமாட்டோம்; ஆனல் 'சூறைக்காயாக'வும் ஆக்கிவிடமாட்டோம்.

''பெட்டைக்கோழி, எப்பொழுதுமே முட்டையிட்டுக்கொண்டிருக்காது; அதற்கான காலத்தில்தான் இடும். அதைப்போல, தி. மு. கழகத்தின் சக்தி நினைத்தபோதெல்லாம் செலவழிக்கப்படாமல், ஒரு நல்ல குறிக்கோளுக்காகப் பயன்படவேண்டும்.

''இதற்கு மொழி உணர்ச்சியும், நாட்டுப் பற்றும் மக்களிடையே ஏற்படவேண்டும்.

''பொதுவாகத் தமிழர்களிடம் சாதியைப் பற்றி — ஊரைப் பற்றி—தொழிலைப்பற்றிச் சொல்லும் தோழர்கள், மொழியைப் பற்றியும், நாட்டைப் பற்றியும் சொல்ல முடியவில்லை.

''தமிழர் என்ற உணர்ச்சியையும், திராவிடம் என்னும் இலட்சியத்தையும் மக்களிடம் ஊட்டிவிட்டால் பிறகு வெற்றிபெறுவது மிக எளிது.

''பல தோழர்கள் கேட்கிருர்கள்—'10-15 ஆண்டாக நீங்கள் இந்த நாட்டுப் பிரிவினையைப்பற்றிச் சொல்லுகிறீர்களே—ஜின்ஞ சொல்லுவதற்கு முன்ஞலேயே சொன்னீர்களே — பாகிஸ்தான் கிடைத்துவிட்டது; உங்களால் ஏன் இன்னும் பெற முடியவில்லை?' என்று!

''இப்படிக் கேட்பவர்களில் இரண்டு வகையுண்டு; 'ஐயோ, இவர்கள் திராவிடநாடு கேட்கிருர்களே' என்ற மன எரிச்சலுடன் கேட்பவர்கள் முதல் வகையினர்; 'இவ்வளவு பாடுபட்டு இன்னும் திராவிடம் பெறமுடியவில்லையே' என்ற ஏக்கத்துடன் கேட்பவர்கள் இரண்டாம் வகையினர்.

''பாகிஸ்தான் கேட்டவர்கள் சாதி-குல பேதத்தால் வேறுபடாமல், நபிகள் நாயகம் போரால் ஒன்றுபட்டிருந்தார்கள்; ஜின்ஞ சொன்னது அவர்களுக்குப் புரிந்தது; 'தனி நாடு வேண்டுமா?' என்று ஜின்ஞ கேட்டார்; 'ஆம்' என்ருர்கள் மக்கள்; மெல்லிய குரலில் சொன்னவர்கள் பிறகு உரத்தக் குரலில் பாகிஸ்தான் கேட்டார்கள்; 'வெட்ட வெளியிலே நின்று கேட்டால் போதாது; சட்டசபை போனல்தான் முடியும்' என்ருர், ஜின்ஞ! டெல்லி பாராளு மன்றத்துக்குப் போய், சொல்ல வேண்டிய இடத்தில் சொன்ஞர்; விழவேண்டிய காதுகளில் விழுந்தது; கிடைக்க வேண்டியது கிடைத்தது!

''இங்கு அப்படியல்ல நிலைமை; 'நீ தமிழன்—திராவிடன்,' என்று நினைவூட்ட வேண்டியுள்ளது. அந்த உணர்ச்சி நினைவிலிருந்தால் திராவிட நாட்டைப் பெற்றுவிடலாம்.

''ஆகையால், மொழி—இன உணர்ச்சியை வற்புறுத்திச் சொல்லிவருகிறது தி. மு. கழகம். இதுதான் நம் இலட்சியம் நிறைவேறுவதற்கான அஸ்திவாரம். மூன்றடுக்கு மாளிகை கட்டுவதற்கு முன், அதன் கடைக்கால் சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

''இந்த நேரத்தில் எனக்கொன்று நினைவுக்கு வருகிறது; பத்து நாட்களுக்கு முன் நான் கோவைக்குச் சென்றிருந்த பொழுது, 'கவுந்தம்பாடி' என்ற ஊரிலே என்னை அழைத்திருந்தார்கள்; அங்கு நான் கண்ட ஒரு காட்சியை உங்களுக்குச் சொல்லுகிறேன்—ஆட்சியாளருக்கும் இது தெரியவேண்டுமென்றே சொல்கிறேன். அங்கு குப்பை கூட்டிப் பிழைக்கும் ஆதிதிராவிட மக்களுக்காக 47 வீடுகள் கட்டப்பட்டிருந்தன; தெரு கூட்டும் மக்களுக்குப் புத்தம்புதிய வீடுகள் கிடைக்கப்போகின்றன என்ற செய்தியை ஏட்டிலே பார்த்ததும் கண்ணில் ஒத்திக்கொண்டார்கள் மக்கள்.

''தாழ்வாரம்—தனி அறை—சமையற்கட்டு—சுற்றுக் சுவர்—மங்களூர் ஓடு இவற்றுடன் கூடிய நலல புதிய வீடு; இதைப் பார்த்ததும் அந்த ஆதித்திராவிட மக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

''அந்த ஆதித்திராவிட மக்கள் ஆளுக்கு ரூ. 50 கொடுக்க வேண்டும்; அதோடு, ஏற்கனவே அவர்கள் குடியிருந்த இடத்தை விற்று அதிலிருந்து கிடைக்கும் ரூ. 700-யும் கொடுத்தால் அரசாங்கம் ரூ. 250 இனமாகக் கொடுக்கும். அதோடு அரசாங்கம் மேலும் ஒரு 250 ரூபாய் கடனுகத் தரும், (இந்தக் கடனை 20 ஆண்டுத் தவணையில் அடைத்துவிடவேண்டும்) இத்தொகையைக் கொண்டு கட்டப்பட்டவைதான் அந்த வீடுகள். இதைப் பார்த்தால் சர்க்கார் எவ்வளவு நன்மைகளை ஆதித்திராவிட மக்களுக்குச் செய்திருக்கின்றது என்று நினைக்கத் தோன்றும்.

''அந்தப் புதிய வீடுகளைத்திறக்க வரவேண்டுமென்று அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்கு அந்த ஊர் அதிகாரிகள் தந்தி மூலம் கேட்டுக்கொண்டார்கள்; அமைச்சரும், வர ஒப்புக்கொண்டார். இந்த நிலையில்—திறப்பு விழா நடப்பதற்குச் சில தினங்கள் முன்ஞலேயே பெருமழையின் காரணமாக அந்த வீடுகள் இடிந்துவீழ்ந்தன. அமைச்சர் வருமுன்பே 29 வீடுகள் இடிந்து குட்டிச்சுவராகிவிட்டன. மற்றவை அரைகுறையாக இடிந்து அலங்கோலமாக இருக்கின்றன. அந்த வீடுகளிலிருப்பவர்கள் பகலில் உள்ளேயும், இரவில் வெட்ட வெளியிலுமாக வசிக்கிருர்கள்; இன்னும் சிலர், சிறு கொட்டகை போட்டுக்கொண்டு வசிக்கிருர்கள்

''இந்நிலையில் அமைச்சரை வர வேண்டாமென்று தந்தி கொடுத்துவிட்டார்கள். அந்தத் தந்தியைக் கண்டதும் அமைச்சர் ஒன்றும் புரியாமல், 'என்ன ஆணவம், இவர்களுக்கு? ஏன் வரவேண்டாம் என்கிருர்கள்?—எனக்கருதியிருப்பார். அமைச்சரை வர வேண்டாமென்று தந்தி கொடுத்திருந்த அந்த ஊர்க்காரர்கள் என்னை அழைத்திருந்தார்கள்; நான் போய் அந்தக் காட்சிகளைக் கண்டேன்.

''ஒரு கட்சிக்கும் அடித்தளம் சரியில்லையானல் கவந்தம்பாடி போலாகிவிடும் என்ற புதிய பழமொழியைக் கற்றுக்கொண்டு அவ்வூரைவிட்டுவந்தேன்.

''இது, மகிழ்ச்சிக்குரிய செய்தியல்ல. ஏழை வீட்டுப் பெண் எந்த அளவுக்கு அச்சத்தையூட்டக்கூடியவளாக இருப்பாளோ அத்தகைய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

''இந்தக் கழகம் 2,000 கிளைகளையும், தோழர்களையும் பெற்றிருக்கிறது. காமராசரோ, சுப்பிரமணியமோ, சிந்தனையையெல்லாம் உலகப் புகழிலேயே செலுத்திவரும் நேருவோ செய்ய முடியாத காரியத்தை நாம்—சாமான்யர்களான நாம்—நடத்திக்காட்டிவருகிறேம். 2 இலட்சத்துக்குமேல் உறுப்பினர்கள் இருக்கிருர்கள். இக்கழகத்தில்; நான் தவருமல் கூட்டம் போட்டு வருகிறேம்; 'நமது நடராசனிடம் பேசி 1 திங்கள் ஆகிறதே கொஞ்சம் அவரிடம் பேசலாம்' என்ருலோ, 'நான் 10½ மணி வண்டிக்குப் போகிறேன்' என்கிருர். நாவலரைக் கேட்டால் நாகப்பட்டினம் போயிருப்பதாகச் சொல்லுகிருர்கள்; சம்பத் டெல்லிக்கு—இப்படி எல்லோருமே அலைந்து திரிந்துகொண்டிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவுக்குப் புதிய பொறுப்பும் ஏற்பட்டிருக்கிறது. இதிலே ஈடுபட்டிருப்பவர்கள் மிகமிகப் பொறுப்புணர்ச்சியுடன் கட்சியைக் கவனிக்கவேண்டும். நம்மைப் பார்த்துப் பொருமைப்படுபவர்கள் 'கழகம் கலகலத்துவிடாதா' என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

''தி. மு. கழகம் துவக்கப்பட்டு சிறிது நாட்களுக்கெல்லாம் நடந்த நிகழ்ச்சியொன்றை உங்களுக்குச் சொல்லுகிறேன். சேலம் மொரப்பூர் இரயில் நிலயத்தில், பெரியாரவர்கள் — அதிகாலை இரயிலுக்குப் போவதற்காக—இரவில் வந்து படுத்துக் கொண்டிருந்தார்; அப்பொழுது அங்கிருந்த இரயில் நிலைய அலுவலாளர் ஒருவர்—அவர் தி. மு. க. அனுதாபி போலும்—பெரியாரிடம் 'தி. மு. க. பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டிருக்கிருர்; அதற்குப் பெரியார், 'அண்ணுதுரை நல்லவன்தான்— கெட்டிக்காரன் தான்—ஆனல் சோம்பேறியாயிற்றே! கூட்டத்துக்கே போகமாட்டான்; நானே பிடித்துத் தள்ளி, தூண்டிவிட்டால்தான் போவான்; ஒரு ஊருக்குப் போனல் ஒன்பது ஊருக்குப் போகமாட்டான்' என்று சொன்ஞராம்! அதைக் கேட்ட அந்த அலுவலர் 'பெரியார் இப்படிச் சொல்லுகிருர்' என்று எனக்குக் கடிதமெழுதி யிருந்தார்.

''நான் அப்பொழுது சோம்பேறியாக இருந்ததும் உண்மை; இப்போது சுறுசுறுப்பாக இருப்பதும் உண்மை!

(2-ம் பக்கம் பார்க்க)

## 'ஸ்பிரிட்டுகள்' விற்பனை

### புதிய அனுமதி கிடையாது

சென்னை, அக். 25—

'டிங்சர்', மற்றும் இதர வகை ஸ்பிரிட்டுகள் விற்பனை செய்வதற்கு புதிதாக அனுமதி வழங்கப்படமாட்டாது என்று, சென்னை சர்க்கார் அறிவித்துள்ளது.

சாராயம் கிடைப்பது அரிதாயிருப்பதால், இந்த 'ஸ்பிரிட்டு'கள் ஏராளமாகத் தேவைப்படுகிறதாம். எனவே தான் இவற்றினைக்கட்டுப்படுத்தும் நோக்குடன், இந்தமுடிவை, போலீஸ் கமிஷனரும் சென்னை மாவட்ட அதிகாரியும் கூட்டாக மேற்கொண்டிருக்கின்றனராம்.

## பள்ளி, கல்லூரிச் சிறப்புக் கூட்டங்களில் க. அன்பழகன் சிறப்புரை

★

**பொள்ளாச்சி:**

பொள்ளாச்சியில் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள கல்லூரியில், 6—10—57 மாலை 5 மணிக்கு தோழர் க. அன்பழகன் எம். எல். ஏ. அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழ்த்துறைத் தலைவர் திரு. வேங்கடசாமி அவர்கள் தலைமைவகித்து, அன்பழகன் அவர்களை வரவேற்று, மாணவர்கட்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தோழர் அன்பழகன் அவர்கள், 'மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்வதன் காரணங்களை எடுத்துக்காட்டி, எத்தகைய சூழ்நிலையில் பங்குகொள்வது தவருகாது' என்பதனை விளக்கினுர்.

**ஈரோடு:**

9—10—57 மாலை 5 மணிக்கு ஈரோடு மகாசனக் கல்லூரி மாணவர் மன்றத்தின் சார்பில் தோழர் க. அன்பழகன் அவர்கள் ஓர் விரிவுரை நிகழ்த்தினுர். கல்லூரி முதல்வர் திரு. சி. டி. இராஜேஸ்வரன், அன்பழகன் அவர்களை வரவேற்றுப் பாராட்டி உரைத்தார்.

**சென்னை-புரசை:**

பெண்டிங் பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் 10—10—57 மாலை 4 மணிக்கு, பாரதிவிழா கொண்டாடப்பெற்றது. திரு. செங்கல்வராயன் தலைமை வகித்தார்; கல்லூரித் தலைவி திருமதி அருளப்பன்; வரவேற்புரை ஆற்றினுர்; தோழர் அன்பழகன் அவர்கள், பாரதியின் தொண்டினை விளக்கிக் கூறி அவரது படத்தை திறந்து வைத்தார். மாணவிகள் பாரதி வாழ்க்கையை நாடகமாக நடித்தனர்.

**முக்கூடல் (நெல்லை):**

இந்நகர் சொக்கலால் உயர் நிலைப்பள்ளி மாணவர் இலக்கியக் கழகத்தின் சிறப்புக்கூட்டம் 14—10—57 மாலை4-30-மணியளவில், திரு. டி. எஸ். ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் அவர்கள் 'தாய்மொழி' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினுர்; திரு. அன்புமணி அவர்களும் பேசினுர்.

**மதுரை:**

15—10—57 மாலை 4-30 மணிக்கு, மதுரை தியாகராசர் கல்லூரி இளங்கோ மன்றத்தில் மன்றத்தலைவர் எஸ். தங்கமுத்து, தலைமையில் ஓர் சிறப்புக்கூட்டம் நிகழ்ந்தது. தோழர் க. அன்பழகன் அவர்களை கல்லூரி முதல்வர் திரு. இராமநாதன் (பிள்ளை) வரவேற்ருர். அடுத்து தேநீர்விருந்து நடைபெற்றது. நிழற்படம் எடுக்கப்பட்ட பின்னர் கூட்டம் துவங்கியது. கூட்டத்திற்கு, கல்லூரிப் புரவலர் கருமுத்து தியாகராசர் அவர்களும், பேராசிரியர்களும், மாணவர்களும், திரண்டு வந்திருந்தனர். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் அன்பழகன் 'நாடும் மொழியும்' என்ற தலைப்பில் உணர்ச்சியும், எழுச்சியும் மிக்க தொரு உரை நிகழ்த்தினுர்.

**அமெரிக்கன் கல்லூரி**

15—10—57 மாலை 6-30 மணிக்கு, மதுரை அமெரிக்கன் கல்லூரி-திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் ஓர் சிறப்புக்கூட்டம் நிகழ்ந்தது. மாணவர்களும், மற்றவர்களும் பெருமண்டபத்தின் உள்ளும் புறமும் நிறைந்திருந்தனர். மாணவர் தலைவர், பேராசிரியர் அவர்களை வரவேற்றுப் பேசினுர்.

தோழர் அன்பழகன் அவர்கள் பெருத்த கையொலிக்கிடையே எழுந்திருந்து சுமார் 1-30 மணி நேரம் 'காலமும் கருத்தும்' என்னும் தலைப்பில் பேசுகையில் காலத்திற்கேற்ற கருத்தோடு இளைஞர் உலகம் முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ாத்தூர் தொகுதி தேர்தல் வழக்கு

# காமராசர் அப்பீல் மனு

## டெல்லி நீதிமன்றமும் நிராகரித்தது

தேர்தல் வழக்கு சம்பந்தமாக திரு. காமராசர் டெல்லி உயர்தர (சுப்ரீம்) நீதிமன்றத்தில் செய்து கொண்ட அப்பீல் மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது.

சென்னை சட்டசபைக்கு சாத்தூர் தொகுதியிலிருந்து திரு. காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்டதை எதிர்த்து மேற்படி தொகுதி வாக்காளரான திரு. குஞ்சுத் தேவர் என்பவர் கொடுத்த மனு மதுரை தேர்தல் நீதிமன்றத்தில் விசாரணையிலிருக்கும்போது, வழக்கை விசாரணை செய்யாமலே தள்ளுபடி செய்துவிட வேண்டுமென்று கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. காமராசர் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது நினைவிருக்கலாம். அதை எதிர்த்து அவர் டெல்லி உயர்தர (சுப்ரீம்) நீதிமன்றத்தில் அப்பீல் செய்தார்.

விசாரணையே இல்லாமல் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று திரு. காமராசர் மனுவில் கோரியிருப்பது சரியில்லையென்றும், இரண்டுபேரா அவகாசம் கொடுத்து வாதி தரப்பின் பதிலைத் தெரிந்துதான் முடிவு செய்ய வேண்டுமென்றும், டெல்லி (சுப்ரீம்) நீதிமன்றம் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

டெல்லி நீதிமன்றமும் அதை நிராகரித்துவிட்டதால், இனி, மதுரை தேர்தல் வழக்கு மன்றத்தில், வழக்கு விசாரணை எடுத்துக் கொள்ளப்படும்.

---

## கழகக் கூட்டம்

**அரியலூர்:**

பெட்ரோல் 'பங்க்' எதிரில்
30—10—57 இரவு 8 மணிக்கு
தலைவர்: து. எத்திராசு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
எம். எஸ். மணி
கோ. சிவபெருமாள்

---

### மணவழகர் மன்றம்

30—10—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை—பெத்து நாய்க்கன்பேட்டை, முருகேச முதலித் தெரு, 2-ம் எண்ணுள்ள கட்டடத்தில் 'திருக்குறள் வகுப்பு' புலவர் கா. சி. தனக்கோட்டி அவர்களால் நடத்தப் பெறும்.

---

சென்னை சட்டசபை—கேள்வி நேரம்:

## அமைச்சர்கள்

### வருமானம் குறையாது!

சென்னை, அக். 28—

சென்னை மாநில அமைச்சர்களுக்கு திங்கள்தோறும் ரூ. 1,500 ஊதியமும், வீட்டு வாடகைச் செலவும், 'பிரயாணப் படி'யும் தரப்படுகின்றன.

சென்னை மாநில அரசாங்கத்தின் செலவைக் குறைத்து, சிக்கனத்திற்கான ஆக்க யோசனைகளைக்கூற நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி, அமைச்சர்கள் பெறும் அதிகப்படியான வருமானத்தைக் குறைக்கமாட்டார் என்பதை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

சென்ற ஜூன் திங்களில் நியமிக்கப்பட்ட இந்த அதிகாரி, பூர்வாங்க அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும், இறுதி அறிக்கையை அவர் அனுப்பமாட்டார் என்றும், அவர் அவ்வப்போது அறிவிக்கும் யோசனைகளை அரசாங்கம் ஏற்று அமுல் நடத்தும் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

★

## 8 மணி நேரம்

### உழைப்பது நியாயமாம்!

தொழில் அமைச்சர் கூற்று

சென்னை, அக். 28—

கோவை மாவட்டப் பருத்தி ஆலை ஊழியர் சங்கம், தொழிலாளர்களின் அதிக அளவு வேலையைக் குறைத்து, நாள் ஒன்றுக்கு 7 மணி நேரம் மட்டும் தொழிலாளர்கள் உழைக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரியது சென்னை அரசாங்கத்திற்குத் தெரியுமாம்!

வாரத்திற்கு 48 மணி நேரம் தற்போது உழைக்கின்றனர்; அதனை 40 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை.

ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆலைத் தொழிலாளர்கள் வாரத்திற்கு 40 மணி நேரம் மட்டுமே உழைக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் வாரத்திற்கு ஆலைத் தொழிலாளர்கள் 48 மணி நேரம் உழைக்கின்றனர்.

இந்த நிலையை உணர்ந்த பின்னரும், சென்னையில் ஆலைத் தொழிலாளர்கள் வாரத்திற்கு 40 மணி நேரம் மட்டும் உழைக்கச் செய்ய சென்னை அரசாங்கம் கருதவில்லையாம்.

சட்டமன்றத்தில் தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் இவ்வாறு தெரிவித்தார்.

★

## பீடித் தொழிலாளர் ஊதியம்

### குறைக்கப்பட்டது உண்மைதானும்!

சேலம் மாவட்டத்தில் சில பீடித்தயாரிப்பு நிலைய அதிபர்கள், தங்களிடம் பணியாற்றும் பீடித் தொழிலாளர்களின் கூலியைக் குறைத்ததும், தொழிலாளர்கள் அறப்போரில் ஈடுபட்டதும் உண்மைதான் என்று தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் தெரிவித்தார்.

தொழிலாளர்களின் நியாயமான குறைகளைப் போக்க சென்னை அரசாங்கம் முனைந்ததாம்; பீடி உற்பத்தி அதிபர்களிடம் கலந்து பேசினாராம்; அது பயனளிக்கவில்லை!

★

## உழவர்களிடம்

### ஆட்சியினர் காட்டும் அக்கறை

சிதம்பரம் தாலுகாவில் வடக்கு இராஜ கால்வாயிலிருந்து, ஏற்றத்தின் மூலம் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சக்கூடாது என்று சென்னை அரசாங்கம் தடை செய்துள்ளது உண்மைதானும்! கரை பலவீனமடைவதே இதற்குக் காரணமாம்!

உணவு அமைச்சர் பக்தவத்சலம் இதனைத் தெரிவித்தார்.

★

## தொழில் வளர்ச்சிக் குழு

சென்னை மாநிலத்தில் தொழில் முன்னேற்றத்திற்கான ஆக்கத் திட்டங்களை உருவாக்க, 'தொழில் வளர்ச்சிக் குழு' அமைக்கப்பட்டுள்ளதாம். இந்தக் குழுவில் பல துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளனவாம்.

தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் இதனைத் தெரிவித்தார்.

★

## சென்னைக்கு பாலாற்று தண்ணீர்

### இதற்கும் டில்லியை எதிர் நோக்குகின்றனர்!

மைசூர் மாநில அரசாங்கத்துடன், சென்னை அரசாங்கம் கலந்துபேசி பாலாற்றுத் தண்ணீரைப் பெறுவதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவியை நாட வேண்டிய நிலை சென்னைக்கு ஏற்பட்டுள்ளதாம்!

இரண்டுமுறை மைசூர் பிரதிநிதிகளுடன் கலந்து பேசிய பின்னர் இதை அறிவித்துள்ளார், சென்னை நிதி அமைச்சர்!

பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டில் உருப்படியாக எதும் சென்னை அரசாங்கம் சாதிக்கவில்லையாம்!

★

## சொந்த வீட்டுக்கு வரி

### உயர்வதைத் தடுப்பதற்கில்லையாம்

சொந்த வீட்டில் சொந்தக்காரர்கள் குடியிருந்தும், ஸ்தல ஸ்தாபனங்கள், அதிக வருமானம் வேண்டிய போதெல்லாம் வீட்டு வரியை உயர்த்தி வருவதை சென்னை அரசாங்கம் தடுப்பதற்கில்லையாம்!

ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் வீட்டு வரி விதிக்கப்படுகிறதாம்!

நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

★

## போலீஸ் அதிகாரி மீது குற்றச்சாட்டு

### நீதிமன்ற விசாரணை கிடையாதாம்

சென்னை போலீஸ் அதிகாரிகளைப் பற்றிக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய நியமிக்கப்பட்ட நீதிபதி திரு. இராமசாமி, போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை தந்துள்ளார் என்றும், ஐ. ஜி. பற்றிக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமில்லையென்றும், அவர் அறிவித்த முடிவே இறுதியானது என்றும், மேலும் சட்டபூர்வமாக நீதிமன்ற விசாரணை நடத்த சென்னை அரசாங்கம் கருதவில்லை என்றும் போலீஸ் அமைச்சர் திரு. பக்தவத்சலம் தெரிவித்தார்.

சட்டபூர்வமான விசாரணை நடத்தவேண்டும் என்று, விசாரணை நடத்திய நீதிபதி கூறவில்லையாம்!

அகில இந்திய ஒழுங்கு விதிகள், அகில இந்திய நடப்பு விதிகள், பொது ஊழியர் நடப்பு விதிகளின்கீழ் மட்டுமே இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி விசாரணை நடத்தமுடியுமாம்! நீதிபதி அளித்த அறிக்கையே முடிவானதாம்!

★

## இணைப்புக்குப் பிறகு ஊழியர்களுக்கு விதிகள்

புதிய மாநில அமைப்பின் காரணமாக சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்ட திருவாங்கூர்-கொச்சி பகுதியில் பணியாற்றும் ஊழியர்கள், பழைய திரு—கொச்சி அரசாங்க விதிகளின் கீழ் நடத்தப்படுகின்றனராம்.

புதிய மாநில அமைப்புக்குப் பிறகு வேலைக்கு வந்தவர்களுக்கு சென்னை மாநில விதிகள் கடைப்பிடிக்கப்படுகிறதாம்.

நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இதனைக் கூறினார்.

---

# டில்லி வஞ்சித்தது உண்மைதானும்!

## சென்னையில் உணவுப் பஞ்சம் வராதாம்!

சென்னை, அக். 28—

சென்னை மாநிலத்தில் உள்ள 'நியாய விலைக் கடை'களை மூடிவிட வேண்டும் என்று கடந்த செப்டம்பரில் மத்திய அரசாங்கம் அறிவித்தது உண்மைதானும்!

சென்னை மாநிலத்தில் விலை உயர்வு இல்லையாம்; ஆனால் விலை அதிகமாகத்தான் உள்ளதாம்!

மத்திய அரசாங்கத்தின் உணவு இறக்குமதிக்கொள்கைக்கு மதிப்பு கொடுத்து பாதி நியாயவிலைக் கடைகளுக்கு மட்டும் தேவைப்படும் அரிசியை சென்னை கடனாகப் பெற்றுள்ளது என்று பெருமையுடன் சட்ட மன்றத்தில் தெரிவித்தார் உணவு அமைச்சர் பக்தவத்சலம்.

அடுத்துவரும் அறுவடைக் காலத்தில் மத்திய அரசாங்கத்திடம் கடனாகப் பெறும் அரிசியை திரும்பக் கொடுப்பதால், சென்னை மாநிலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படாதாம்! ஏற்பட்டாலும், இப்போது கடனாக மட்டும் தேவைப்படும் அரிசியைத் தந்துள்ள மத்திய அரசு தாராளமாக—தென்னாட்டு மக்களிடம் அக்கறைகொண்டு, தரும் என்று தன்னுடைய நம்பிக்கையை வெளிப்படுத்தினார், அமைச்சர்!

'தென் உணவு மண்டலத்தின் மூலம் சென்னை மக்களின் உணவுப் பிரச்சினை கவனிக்கப்படும்' என்று தோழர் க. அன்பழகன் அவர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

வளவனூரில் மக்களுக்கு நன்மை செய்துவந்த 3 நியாய விலைக் கடைகளை சென்னை அரசாங்கம் மூடியது உண்மைதான் என்றும், மீண்டும் அவசியம் என்று வற்புறுத்தினால் ஒரு நியாய விலைக் கடையைத் திறக்க மாவட்ட கலெக்டருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

ஆந்திர வியாபாரிகள் தமிழ்நாட்டில் அரிசி கொள்முதல் செய்வது உண்மைதான் என்று தோழர் அண்ணாமலை அவர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

---

# இந்தித் திணிப்பைக் கைவிடக் கோரி பண்டிதருக்கு வேண்டுகோள்

## கையொப்பமிட்டுள்ளோர் விவரம்

இந்தியை ஆட்சி மொழியாக்கும் திட்டத்தைக் கைவிடக் கோரி பிரதமர் பண்டித நேருவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ள தமிழக நல்லறிவாளர்களின் விவரம் கீழே தரப்படுகிறது:—

1. சி. பி. இராமசாமி அய்யர் —முன்னாள் துணைவேந்தர், அண்ணாமலை, காசி பல்கலைக் கழகங்கள்.
2. கே. சீனிவாசன் —'இந்து' ஆசிரியர்.
3. டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் —திருவாங்கூர் மாநில உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி.
4. சி. இராசகோபாலாச்சாரியார் —முன்னாள் கவர்னர்-ஜெனரல்.
5. எஸ். ஜி. மணவாளராமானுஜம் —அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்.
6. எஸ். அனந்தராமகிருஷ்ணன் —பிரபல தொழிலதிபர்.
7. ஆர். வி. கிருஷ்ண அய்யர் —சென்னை சட்டசபையின் முன்னாள் செயலாளர்.
8. சி. ஆர். சீனிவாசன் —'சுதேசமித்திரன்' ஆசிரியர்
9. ஏ. என். சிவராமன் —'தினமணி' ஆசிரியர்
10. எஸ். பி. ஆதித்தன் —'தினத்தந்தி' ஆசிரியர்
11. எஸ். எஸ். வாசன் —'ஆனந்த விகடன்' ஆசிரியர்
12. டி. சதாசிவம் —'கல்கி' ஆசிரியர்
13. காசா சுப்பாராவ் —'சுயராஜ்யா' ஆசிரியர்
14. வி. எல். எத்திராஜ் —வழக்கறிஞர் சங்கத் தலைவர்
15. வி. சி. கோபாலரத்தினம் —வழக்கறிஞர் சங்கத்தலைவர்
16. எம். எஸ். ஏ. மஜீத் —தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்க கௌரவச் செயலாளர்
17. எம். சுப்பராய அய்யர் —விவேகானந்தா கல்லூரி, மற்றும், சென்னை தொழிற் கல்விக் கழக 'கரெஸ்பாண்டெண்ட்'
18. ஆர். கிருஷ்ணமூர்த்தி —பச்சையப்பன் கல்லூரி தலையாயர்.
19. எம். கே. சண்முகம் —சர். தியாகராயர் கல்லூரி தலையாயர்.
20. ஆர். பி. சேதுப் பிள்ளை —சென்னை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்.
21. எம். எம். பட் —சென்னை பல்கலைக் கழக கன்னடப் பேராசிரியர்.
22. திருமதி ருக்மணி அருண்டேல் —அடையாறு கலாக்ஷேத்திரம்
23. திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி —பிரபல இசைவாணி
24. டி. கே. சண்முகம்
25. டி. கே. பகவதி —பிரபல தமிழ் நாடகக் கலைஞர்கள்.
26. ஏ. ஜி வெங்கடாச்சாரி —தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்.
27. எஸ். ஆர். வெங்கட்ராமன் —இந்திய ஊழியர் சங்கச் செயலாளர்
28. கே. கோதண்டபாணி பிள்ளை —தமிழ்க் கலாச்சாரக் கழகச் செயலாளர்
29. ஏ. சுப்பையா —தென்னிந்திய விவகார ஆய்வு மன்றத் தலைவர்
30. எஸ். நாராயணசாமி —ஒய்.எம்.ஐ.ஏ. செயலாளர்
31. பி. ஜே. அனந்தராஜ் —ஒய்.எம்.சி.ஏ. செயலாளர்
32. திருமதி எல். ஏ. பிதாவதியன் —ஒய்.டபிள்யூ.சி.ஏ. தலைவர்.
33. எச். சி கோதாரி —சென்னை ஸ்டாக் எக்சேஞ்சு தலைவர்.
34. வி. எஸ் எல். நாதன் —தமிழ் வர்த்தகக் கழக கௌரவச் செயலாளர்.
35. எஸ். செல்லசாமி —ஆட்சிமொழி மாநாட்டுச் செயலாளர்.

---

## இளமைத் துடிப்புள்ள புது இரத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டு பல தலைவர்களும் கலந்துகொள்வதன் நோக்கம், இளைஞர்களை காங்கிரஸ் அணிக்கு இழுப்பதே என்று கூறப்படுகிறது.

இந்த இளைஞர் மாநாடு, 'மாநாடு' என்று அழைக்கப்பட்டாலும், ஒரு திருவிழாவாகவே நடைபெறுகிறதாம்! அதாவது, ரஷ்யாவிலும், இதர கம்யூனிஸ்டு நாடுகளிலும் நடைபெறும் இளைஞர் விழாக்களை மனதில்கொண்டு இது நடத்தப்படுகிறதாம்! இதில் விளையாட்டுப் போட்டி, கலாச்சார விழா, திறமைகாட்டும் பந்தயங்கள் எல்லாம் உண்டாம்!

---

'நம் நாடு' இதழ்

## விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம்நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணபித்துக் கொள்க:—

பூதலூர்
திண்ணனூர்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேலூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சத்திரப்பட்டி

—நிர்வாகி: 'நம் நாடு'

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.